மின்னல் -2 முழக்கம் - 5

# வான் முழக்கம்



## நிரந்தர சமாதானத்திற்காக...

முதலாம் ஆண்டுச் சிறப்பிதழ் – 2003

காலாண்டு பல்சுவை இதழ் விலை 25/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமராட்சி பருத்தித்துறையில்
V.D.O மற்றும் Audio பதிவுகளிற்கும்
CD க்களை வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்கும்
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

E.R.A VIDEO VISION & AUDIO RECORDING

E.R.A-V.D.O விசன் அன் ஓடியோ றைக்கோடிங்

Main Street
Point Pedro

உரிமையாளர்
E.அருணாச்சலம்

பிரதான வீதி,
பருத்தித்துறை.



சமாதானம் நிலவும் இந்த சூழலில்
உல்லாசமாய் உங்கள் பொழுதைக் கழிக்கவும்
நீங்கள் விரும்பிய இடத்திற்கு
தரைமார்க்கமாகவோ அல்லது விமானம் மூலமோ செல்லவும்
வசதிகளை ஏற்படுத்தும் சிறந்த நிறுவனம்

R.B. BOOKING CENTRE

15,Grand Bazaar,
Jaffna.

அரச அங்கீகாரம்
பெற்ற நிறுவனம்

வைரவர் கோவிலடி,
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.



இறைமையும் சுதந்திரமான கூட்டுறவுமே
நாட்டிற்கு உயர்வு

எமது உற்பத்திகள்
பதநீர்
கள் . போத்தல்கள்
பனம் வெல்லம். பனம்பாணி
கல்லாக்காரம் என்பனவாகும்.

சித்திரைப்
புத்தாண்டு வாழ்த்துக்கள்
அனைவருக்கும்
உரித்தாகுக
2003

எமது சேவைகள்
மகளிர் தையல் பயிற்சி,
அங்கத்தவர் பணி பயிற்சி வகுப்புக்கள்,
பாலர் பாடசாலை போசாக்குத் திட்டம்

முதலாம் ஆண்டில் காலடி பதிக்கும் வான்முழக்கம் தொடர்ந்து முழங்க வாழ்த்துகிறோம்

சங்கானை பனை தென்னைவள
உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கம்

பிரதான வீதி, சங்கானை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25/-



# ஆசிரியர் உள்ளத்தில் இருந்து................



## உள்ளே...

1. முழக்கம்
நிரந்தர .... 02
2. மின்னல் 04
3. ஒலாண்ட.... 05
4. நாற்சந்தியில். 08
5. தமிழவன்.... 10
6. கவிதைப்..... 12
7. சிறுகதை..... 18
8. மூன்றாம்...... 21
9. கணனிக்...... 23
10. மனிதநேயம்.. 26
11. முகாமைத்..... 28

வான்முழக்கம்
284, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:
0777 -111047

வான்முழக்கம் தனது ஒரு வயதைப் பூர்த்தி செய்து இரண்டாவது வயதில் கால் பதிக்கும் இந்த வேளையில், கடந்த காலங்களில் வான்முழக்கத்திற்கு ஆதரவுக்கரம் நீட்டிய அன்பு உள்ளங்களையும், வான்முழக்கம் தொடர்ந்து வெளிவர விளம்பரங்களை மனம் கோணாமல் தந்து உதவும் வர்த்தக முதலீட்டாளர்களிற்கும் வான்முழக்கம் என்றும் நன்றியுடையதாய் இருக்கும் என இந்த வேளையில் நினைவுபடுத்துவதுடன், பாடசாலைகளின் அதிபர்கள், தனியார் கல்வி நிலைய இயக்குநர்கள் என்போர் வான்முழக்கம் அனைத்து உள்ளங்களிடமும் தவழ வழங்கி வரும் ஆதரவுக்கரத்தை தொடர்ந்தும் அன்புடன் இறுகப் பற்றிப் பிடிப்போம் என்பதில் மாறுபட்ட கருத்து இருக்காது என்ற நம்பிக்கையுடன் வான்முழக்கம் முதலாவது இதழை பிரசவிக்க அரசியல் ராணுவ நெருக்கடியான சூழ்நிலையிலும் பல கல்விமான்கள் ஆதரவுக்கரம் நீட்டியிருந்தனர். இவர்களின் இந்த சஞ்சிகையை வெளியிட்டு வைத்து மதிப்பீட்டுரையை யாழ் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்திய பல்கலைக்கழக பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் உட்பட அனைவர்க்கும் வான் முழக்கம் நன்றியுடையதாய் இருக்கும்.

இரண்டாவது வயதில் கால்பதிக்கின்ற வான் முழக்கம் தொடர்ந்தும் பல்சுவை அம்சங்களை தாங்கி வருகின்ற அதேவேளை பல்வேறு வேலைப்பழு உட்பட எமது சக்திக்கப்பாற்பட்ட பல்வேறு காரணங்கள் காரணமாக மூன்று மாதத்திற்கு ஒரு தடவை மட்டும் காலாண்டு இதழாக வான்முழக்கம் தொடர்ந்து உங்கள் கைகளில் தவழ்வான் என்பதை வாசக அன்பு உள்ளங்களிற்கு தெரியப்படுத்துகிறேன்.

அன்புடன் ஆசிரியர்,
**வே.தவச்செல்வம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழக்கம்
# நிரந்தர சமாதானத்திற்காக....

அரசிற்கும், விடுதலைப் புலிகளிற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகியும் மக்களின் இயல்பு வாழ்வு என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. ஸ்ரீலங்காவின் படைத்துறையினர் மனிதாபிமான நடவடிக்கைகளைக்கூட ராணுவ நோக்கில் பார்ப்பதால் மக்களின் இயல்பு வாழ்வு தொடர்ந்தும் கேள்விக்குறியாகவே உள்ளது. ஸ்ரீலங்காவின் யாழ் குடாவின் படைத்தளபதி சரத் பொன்சேகா உயர்பாதுகாப்பு வலயம் என, மக்களின் வாழ்விடங்களை உயர்பாதுகாப்பு வலயமாக பிரகடனம் செய்து மீள்குடியமர்வு நடவடிக்கையினை கடும் நெருக்கடிக்கு உள்ளாக்கி யுள்ளார். இதைவிட நெல்லியடி, மானிப்பாய், நெடுந்தீவு என கடுமையான யுத்த நிறுத்த மீறல்கள் இடம்பெறவும் ஒரு விதத்தில் காரணமாக இருந்துள்ளார் யாழ் குடாவின் படைகளின் தளபதி என்ற வகையில் படையினரைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு சரத் பொன்சேகாவிற்கு உள்ளது. ராணுவ நலனில் மட்டும் அக்கறையுடன் செயற்படும் ஒரு படைத்துறைத் தளபதி சமாதான முயற்சிகளின் தாற்பரியத்தை உணராமல் செயற்படுவது சமாதான முயற்சிகளில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தவே வழி வகுக்கும். இருந்தாலும் பல ஆயிரக்கணக் கான மாவீரர்கள், பொது மக்களின் இழப்புகளின் பின்னரும் தமிழ் மக்களின் நல்வாழ்விற்காகவும், சிங்கள மக்களின் நல்வாழ்விற்காகவும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகளை முறித்துவிட விடுதலைப்புலிகள் முனையமாட்டார்கள் என்பது வெளிப்படை இந்த நிலையில் ஸ்ரீலங்காவின் படைத் துறையினரின் தொடர் ராணுவ நெருக்குதல்களும், உலக நாடுகளின் ராணுவ புலனாய்வுத் துறையினரின் இரகசிய யாழ்ப்பாண வருகையும் சமாதான முயற்சிகளைத் திசை திருப்புமா என சில ஆய்வாளர் கள் வினா எழுப்புகிறார்கள். அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், நோர்வே, யப்பான், லண்டன் போன்ற நாடுகளின் படைத்துறை அதிகாரிகள் உத்தியோகபூர்வமாகவும், இரகசியமான முறையிலும், குடாநாட்டிற்கு வருகை தந்து படைத்துறை அதிகாரிகளுடன் இரகசிய சந்திப்புக்களை நடத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றனர். இதில் ஒரு சுவாரஸ்யமான சம்பவம் அண்மையில் இடம் பெற்றதாகவும் தகவல். இந்து கலாச்சார அமைச்சர் T.மகேஸ்வரன் இந்தியா செல்ல இருந்தார். இந்த நிலையில், இந்தியப் புலனாய்வுத்துறை ஜனாதிபதி சந்திரிக்காவுடன் தொடர்பு கொண்டு சந்திரிக்காவின் நம்பிக்கை நட்சத்திரமான இந்தியத் திரைப்பட நடிகர் M.R.ராதாவின் மகன் றாசு ஊடாக இந்தியாவில் வந்து இறங்கும் அமைச்சரை வரவேற்க ஏற்பாடுகள் நடந்ததாகவும், இதில் இந்தியப் புலனாய்வுத்துறை நினைத்ததை நடிகரின் மகன் ஊடாக சாதித்ததாகவும், தகவல் இதை சரியாக உறுதிப்படுத்த முடியாவிட்டாலும் நடிகரின் மகன் பின்னர் அமைச்சருடன் யாழ்ப்பாணம் இரண்டு தடவைகள் வந்ததும், அமைச்சர் ஜனாதிபதி சந்திரிக்காவை சந்தித்ததும் பழைய கதை. ஆனால் ஒரு விடயம் தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. ராணுவம் தனது மேலாதிக்கத்தை நிலைநாட்டி சமாதானத்தைக் குழப்ப முற்படுவதும், உலக நாடுகள் சில தமது பிராந்திய நலன் கருதி இங்கு மூக்கை நுழைய விட அவசரப்படுவதும் தெரிகிறது. ஆனால் தமிழர்களின் தேசியத்தலைவர் திரு.பிரபாகரன் நிரந்தர சமாதானத்திற்காக, அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறார். தமிழ் மக்களும் தலைவர் நல்ல முடிவு எடுப்பார் என காத்து இருக்கின்றனர். அடுத்து வரும் நாட்களை தலைவர் உன்னிப்பாக அவதானித்து உலக நடப்பிற்கேற்ப முடிவெடுப்பார். எத்தகைய முடிவை தலைவர் எடுத்தாலும், அந்த முடிவு நிரந்தர சமாதானத்திற்கான முடிவாக இருக்கும் என்பதில் தமிழ் மக்களிற்கு அசையாத நம்பிக்கை உள்ளது. பேச்சு மூலமாகவானாலும் சரி, ராணுவ ரீதியிலானதாக இருந்தாலும் சரி தலைவரின் முடிவு தமிழ் மக்களின் நிரந்தர சமாதானம் நோக்கிய முடிவாகத்தான் இருக்கும்.

- பேசாத வார்த்தைக்கு நீ எஜமான் பேசிய வார்த்தை உனக்கு எஜமான்.
- பேசுவோன் மூடனாயிருந்தாலும் கேட்பவன் அறிவாளியாயிருப்பான்
- யாருக்கும் ஒரு துன்பமும் செய்யாதவனே கனவான்
- பொருளுக்கு மனிதன் அடிமை பொருள் யாருக்கும் அடிமையாவதில்லை
- வாயிலே சோறுள்ளவரை வார்த்தைகள் இனிமையாயிருக்கும்
- கொடுப்பவன் ஒரு போதும் நினைவில் வைக்கக் கூடாது. பெறுபவன் ஒருபோதும் மறக்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்னல்

* றான் அலுவலகத்திற்கு உத்தியோகபூர்வமாக வருபவர்களிற்கும், சுற்றுலாப் பாணியில் வருகின்றவர்களிற்கும் அங்குள்ள காந்தமான சாமியார் தாராளமாக உள்ளூர் பானம் ஒன்றை வார்த்துக் கொடுக்கிறாராம். இந்தப் பானம் வருகிற அமைச்சர் மாருக்கும் வழங்கபபடுவதால், தலையைச் சுத்துதாம் அவர்களுக்கு.

* தெல்லிப்பளையில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றின் அதிபர் எடுத்ததற்கெல்லாம் மாணவர் களிற்கு விளாசித் தள்ளுகிறாராம். இவர் இருந்த பாடசாலை எல்லாவற்றிலும் விளாசுவதில் வலு கெட்டிக்காரனாம். இந்தப் புண்ணியமான நடவடிக்கை எப்போது முடிவிற்கு வரும் என ஏங்குகிறார்கள் மாணவர்கள்.

* யாழ்ப்பாணத்தில் உள்ள மத்திய கல்லூரியின் அதிபர் அடிக்கடி பத்திரிகைகளுடன் தொடர்பு கொள்கிறாராம். ஏன் என்று தெரியுமா? பாடசாலையில் பிரபல புள்ளிகள் தங்குவதை பிரபல்யப் படுத்தவாம். இந்தப் பிரபல்யம் மூலம் தனது பெயரையும் பிரபல்யப்படுத்த நினைக்கிறார் என பத்திரிகையாளர்கள் வட்டாரங்கள் கருதுகின்றன.

* வல்வெட்டித்துறைப் பகுதியில் உயிருடன் இருந்த பெண் ஒருவரை இறந்ததாக கொழும்பில் உள்ள தனியார் வானொலி ஒன்று கதறித் தள்ள, சம்பவத்தைக் கேள்விப்பட்டு உறவினர்களும் கதறி அழுதார்களாம். ஐயா செய்தி இல்லாவிட்டால் போடாமல் விடுங்கோ. ஏன் ஐயா உயிரோடை இருக்கிற ஆட்களை கொல்கிறீர் கள் என துடிப்புள்ள செய்தியாளர் ஒருவரிடம் கேட்டாராம் ஒரு வயோதிபர்? அதுவும் சரிதானே.

* யாழில் உள்ள பத்திரிகையாளர் களிற்கு வீடு கட்டிக்கொடுக்கப்படும் என இந்து கலாச்சார அமைச்சர் அண்மையில் அறிவித்தார். அமைச்சர் தேர்தல் காலத்திலும் பத்திரிகையாளர்களிற்கு பலதைச் செய்யப்போவதாகக் கூறினார். எல்லாம் கதையோடு மட்டுமா? எனக் கேட்கிறார்கள் சில செய்தியாளர்கள்.

* தற்போது யாழ்ப்பாணத்தில் இயங்கி வருகின்ற இரண்டு பத்திரிகையாளர் சங்கங்களையும் ஒன்றாக இயங்க வைக்கின்ற முயற்சியில் யாழில் உள்ள சமூக சிந்தனையாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு இரண்டு சங்கத் தலைமைத்துவமும் கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளன. இருந்தும் ஒரு சங்கத்தில் உள்ள வடமராட்சி மண்ணின் மைந்தன் சந்திர மண்டலத்தில் பெயர் கொண்டவர் கடும் எதிர்ப்பு காட்டி வருகிறாராம். ஏதும் எலும்புத்துண்டு விவகாரம் பற்றி சர்ச்சை எழும் என யோசிக்கிறாரோ?

* தற்போது யாழ்ப்பாணத்திற்கு அடிக்கடி புனர்வாழ்வு அமைச்சர் ஜெயலத வந்து செல்வது யாவரும் அறிந்தது. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சர் சுன்னாகத்திற்குச் சென்று உல்லாசமாய்ப் பொழுதைக் கழிப்பதால் ஜெயலத்தின் சொந்த வீட்டில் சற்றுக் குழப்பமாம். ஏன் என்றால் இங்கு சின்னவீடு நிரந்தர வீடாய் மாறி விடுமோ என்ற குழப்பமாம். எல்லாம் தெரிந்த கந்தசாமிக் கடவுள் கண்மூடி மௌனமாய் இருப்பது நியாயமா?

* யாழ் குடாநாட்டில் உள்ள பிரபல பெண்கள் பாடசாலைகள் சில அண்மையில் மாணவிகளைச் சுற்றுலா எனக் கூறி தென்பகுதிக்கு அழைத்துச் சென்றனர். ஒரு மாணவியிடம் 3000/= வீதம் பணம் வாங்கப்பட்டதாம். 200ற்கு மேற்பட்ட மாணவிகள் அழைத்துச் செல்லப்பட்டனராம். உணவாக பாண் தானாம் வழங்கப்பட்டது. மிச்சமாக வந்த பணத்தை பக்குவமாய் சுருட்டிவிட்டார்களாம் கூட்டிச் சென்றோர். பாவம் மாணவிகள்?

---

## உலக அரங்கு

# ஓலாண்ட் தீவுகளின் சுயாட்சி ஒரு பார்வை

ஓலாண்ட் தீவுகளைச் சர்வதேசச் சட்ட நோக்கில் பார்க்கும் ஒருவருக்கு மூன்று விடயங்கள் உடனடிக் கவனத்தை ஈர்க்கும்.

1. **பின்லாந்து நாட்டின் ஒரு சுயாட்சிப் பிரதேசமாக ஓலாண்ட் தீவுகள் அமைகின்றன.**
2. **90% வீதமான மக்கள் ஃபின்னிஷ் (ஃபின்லாந்து மொழி) மொழியைப் பேசுவதான ஒரு நாட்டில் (பின்லாந்து) சுவீடிஷ் மொழியை மட்டும் பேசும் மக்களைக் கொண்ட மாகாணமாக ஓலாண்ட் அமைந்துள்ளது.**
3. **ஓலாண்ட் தீவுகள் இராணுவ சூன்யப் பிரதேசமாக விளங்கி வருகின்றன.**

ஓலாண்ட் தீவுகளானவை கடந்த 75 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்துக்குச் சுயாட்சியைக் கொண்டவையாக விளங்கி வருகின்றன. இன்று உலகத்தில் காணக்கூடிய அதிசிறந்த சுயாட்சி அமைப்புக்களில் ஒன்றென இதனைத் துணிந்து கூறலாம். வேறு பல தீவுகளுக்கும், பிரதேசங்களுக்கும் சுயாட்சி வழங்குவதற்கு உதாரணமாகப் பாவிக்கப்பட்டு வருவதும் ஓலாண்ட் தீவுகள் அனுபவிக்கும் சுயாட்சிதான் என்றால் மிகையில்லை. இதன் சுயாட்சியானது ஒருவித நல்லுறவுப் பின்னணியில் தொடர்ந்தும் வளர்ந்து வரும் ஒன்று என்பதும் கவனிக்கப்பட வேண்டியது. *1991* இல் ஓலாண்ட் சுயாட்சிச் சட்டம் *(Aland Autonomy Act)* ஆக்கப் பட்டது. இதற்கு இரண்டு திருத்தங்கள் *1994, 1996* ஆம் ஆண்டுகளில் கொண்டு வரப்பட்டன.

இது நிலைமையை இன்னும் மேம்படுத்துவதாக உள்ளது. பின்லாந்தின் பாராளுமன்றம் இதனை அதி கூடிய பெரும்பான்மையுடன் நிறைவேற்றியது. ஓலாண்டின் மாகாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றம் இதனை ஏகமனதாக அங்கீகரித்தது. ஓலாண்ட் தீவுகளின் சுயாட்சி அந்தஸ்தினை பின்லாந்து அரசு ஏதேனும் விதத்தில் சீர்குலைக்கும் என்ற அச்சம் ஓலாண்ட் மக்களிடம் தற்போது கிடையாது.

ஓலாண்ட் மாகாணமானது, அதனது சுயாட்சிக் காலம் பூராவும், சுவீடிஸ் மொழி மட்டுமே பேசும் மாகாணமாகவே இருந்து வருகின்றது. *1921*ல் நாடுகள் அவை என்ற சர்வதேச அமைப்பானது *(League of Nations)* பின்லாந்து மீது சர்வதேசக் கடப்பாடொன்றை விதித்தது. இந்தக் கடப்பாடு யாதெனில், ஓலாண்ட் தீவுகளின் சுவீடிஸ் மொழியையும், கலாச்சாரத்தையும், உள்ளூர் வழக்காறுகளையும் மதித்து நடக்க வேண்டும் என்பதாகும். ஆனால் ஓலாண்ட் மக்களிடம் தற்போதுள்ள அச்சம் யாதெனில் மாகாணத்தின் தற்போதைய ஏகமொழி அந்தஸ்து (சுவீடிஸ் மொழி) தொடர்ந்தும் இவ்விதமே நீடிக்குமா? என்பதே. சுயாட்சி விடயத்தில் இருக்கும் நம்பிக்கையுறுதி, இந்த மொழி அந்தஸ்து விடயத்தில் குறைவாகவே உள்ளது. பின்லாந்தின் மக்கள் தொகையில் சுவீடிஸ் மொழி பேசும் மக்கள் தொகை வெகுவாகச் சுருங்கி வந்துள்ளது. *1920*ல் *11%*மாக இருந்த இது *1990* அளவில் *6%*மாகச் சுருங்கியிருந்தது. *(1991* கணக்கெடுப்பின்படி ஏறக்குறைய *5* மில்லியன் மக்கள் தொகை கொண்ட பின்லாந்தில் *296,000* பேர் மட்டுமே சுவீடிஸ் மொழிபேசும் சிறுபான்மையினராவர்). இன்றுவரை பார்ப்பின் ஓலாண்ட் மக்கள் பிரச்சினையின்றி வாழ்கின்றார்கள் என்றுதான் கூற வேண்டும்.

இதற்கு காரணம் ஓலாண்ட் தீவுகளுக்குள் பின்னிஷ் மொழி பேசுபவர்களின் எண்ணிக்கை மிகச் சிறிதாக இருந்து வருவதேயாகும். *1920*ல் இருந்தது போலவே *1990* இலும் இருந்துள்ளது. அதாவது இது கிட்டத்தட்ட *5%*க்கும் குறைந்ததாகவே உள்ளது.

தமது மாகாணத்தில் சுவீடிஸ் மொழியின் முக்கியத்துவத்துக்கு எந்தப் பாதிப்பும் வரக்கூடாது என்பதில் ஓலாண்ட் மக்கள் மிகவும் விழிப்பாகவே இருந்து வருகின்றனர். பொது வாழ்விலும், பொதுத் துறைகளிலும் இங்கு பின்னிஸ் மொழி பாவிக்கப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்கு, எவ்வேளையிலும் தயாராக உள்ள நிலையே இந்த விழிப்பு நிலை எனலாம். ஆனால் இந்த விழிப்பு நிலையும் சவால்களற்றது எனக் கூறமுடியாது. ஏனெனில் அண்மைக் காலங்களில் ஓலாண்ட் தீவுகளுக்கும், பின்லாந்தின் பிரதான தரைப் பகுதிக்கும் இடையிலான உறவாடலும், தொடர்புகளும் அதிகரித்து வருகின்றமையே ஆகும். சர்வதேச மனித உரிமைகள் உடன்படிக்கைகளை மீறக்கூடிய சந்தர்ப்பங்கள் எழும் வாய்ப்புகளும் உள்ளன. தொழில்நுட்ப ரீதியில் மிகவும் முன்னேற்றமடைந்து விட்ட தகவற் சாதனங்களைக் கட்டுப்படுத்துவது அதிக கடினமாகி வருகின்றது.

ஓலாண்ட் தீவுகள் கடந்த *100* ஆண்டுகளுக்கும் மேலாகவே இராணுவ சூன்யப் பிரதேசம் ஒன்றாகவே இருந்து வருகின்றன. *1921*ம் ஆண்டின் மிக முக்கிய சமவாயத்தின்படி *(Convention)* ஓலாண்ட் இராணுவ சூன்யப் பிரதேசமாகவும், நடுவுநிலைப் பிரதேசமாகவும் ஆக்கப்பட்டது. இதனைவிட *1940* இல் சோவியத் யூனியனுடனும், *1947* இல் ஏனைய ஐரோப்பிய நேச அணி நாடுகளுடனும் பின்லாந்து பொருத்தனைகளை *(Treaties)* இது விடயத்தில் செய்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராணுவ சூன்யப் பகுதி என்ற அந்தஸ்தின் ஒரு விளைவு என்ன வெனில், ஓலாண்ட் மக்கள் இராணுவ சேவையிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளார்கள் என்பதே.**

சுயாட்சி, சுவீடிஸ் மரபுகளுக்கான உத்தரவாதம், இராணுவ சூன்யப் பகுதி, நடுவுநிலைப் பிரதேசம் போன்றவற்றை உள்ளடக்கிய விசேட அந்தஸ்தானது நாடுகள் அவையினால் *1921*ல் பலப்படுத்தப்பட்டது. இந்த அந்தஸ்து இன்றுவரை அப்படியே உள்ளதென்றே கூறவேண்டும். *1921*க்குப் பின்னர் சர்வதேசச் சட்டம் எவ்வளவோ மாறிவிட்டது, வளர்ந்து விட்டது. உதாரணமாக, சர்வதேச மனித உரிமைகள் சட்டம் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் பிறந்ததாயினும் மளமளவென வளர்ந்து வருகின்றது. ஆனாலும் *1921*ல் காணப்பட்ட தீர்வானது இன்றைக்கும் மிகப் பொருத்தமாகவே உள்ளது. அதனாலேயே அது பற்றிய ஆய்வு அவசியமாகின்றது.

சர்வதேசச் சட்ட நோக்கில் ஓலாண்ட் மக்களின் கலாச்சார மொழி ரீதியிலான, கல்வி தொடர்பான உரிமைகளை எங்ஙனம் செயற்படுத்தலாமென்பதை ஒருவர் ஆராயின் அங்கே முக்கிய பிரச்சினையாக வருவது சுவீடிஸ் மொழி பேசும் மக்களது உரிமைகளை பின்லாந்து அரசாங்கம் அநியாயமான முறையில் மட்டுப்படுத்துகின்றது என்பதல்ல. ஓலாண்டின் சுயாட்சி என்பது மொழி ரீதியிலும், கலாசார ரீதியிலும் அமைந்த சுயாட்சியாகும். ஓலாண்ட் மாகாணத்தின் சுயாட்சி அந்தஸ்தின் ஆரம்பத்திலிருந்தே கலாசாரமும், கல்வியும் மாகாணத்தின் சுயாட்சி உரிமைக்கு உட்படுத்தப்பட்டு விட்டன.

ஓலாண்டின் மாகாண அரசாங்கம் *1988* இல் வெளியிட்ட பிரசுரமொன்றில் கலாச்சார, கல்வி விடயங்களில் ஓலாண்ட் மாகாணமானது, தனது சொந்தச் சட்டவாக்கம், நிருவாகம் என்பவற்றின் படி பார்க்கையில் ஓரளவுக்குப் பூரண சுதந்திர அரசு போலவே செயற்பட்டு வருகின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது மாகாண அரசாங்கத்தின் சிறிதளவு மிகைப்படுத்தப்பட்ட கூற்றாகவும் கொள்ளப்பட முடியும். ஓலாண்ட் தீவுகள் சர்வதேச ரீதியில் பொருத்தனைகள் எதனையும் செய்து கொள்ளக் கூடிய தகுதியை கொண்டதல்ல என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

ஃபின்னிஷ் மொழி பாவிக்கப்படுவதற்கு ஃபின்னிஷ் நாட்டின் ஒரு பகுதியான ஓலாண்டில் விதிக்கப்படும் மட்டுப்பாடுகள் சர்வதேச மனித உரிமைகள் சமவாயங்களுக்கு ஒத்துப் போவனவாக உள்ளனவா? என்பதே பிரச்சனையாகின்றது. இந்த மட்டுப்பாடுகள் அங்கு வாழும் ஃபின்னிஷ் மொழி பேசும் மக்களுக்குப் பாரபட்சம் விளைவிப்பவையாக இல்லையா என்ற வினாவும் இன்று எழுப்பப்படுகின்றது.

(*தொடரும்*)

**V.T. தமிழ்மாறன்,**
விரிவுரையாளர் சட்ட பீடம்,
கொழும்பு பல்கலைக்கழகம்.


- முடியும் என நம்புவோருக்கு எதுவும் முடியும்.
- வாங்கும்போது நண்பன், கேட்கும்போது பகைவன்
- உழைக்கும் மனிதனின் உறக்கம் இனிமையானது
- உண்மையை நேசி ஆனால் பிழையை மன்னித்துவிடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாற்சந்தியில்



திருநெல்வேலிச சந்தியிலை நிண்டு அரட்டை அடிக்கிறவைக்கு வீட்டிலை வேலை இல்லையோ என்று எண்ணிக் கொண்டு, வீரகேசரி பத்திரிகை வாங்கிக் கொண்டு வெளிக்கிட ஆரம்பிச்ச போது எங்கட புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனா பற்றியும், இந்து கலாச்சார அமைச்சர் மகேஸ்வரன் பற்றியும் ஒரு பெரிய பட்டிமன்றமே நடந்தது மாதிரி இருந்தது. கொஞ்சநேரம் நின்று கேட்டுப் பார்த்தேன் சகிக்கமுடிய வில்லை. இரண்டு பேரைப் பற்றியும் கதைத்த கதையிலை என்னுடைய காதில் கேட்டவற்றில் இந்தமுறை எங்கட புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டொக்டர். ஜெயலத் ஜெயவர்த்தனா பற்றிக் கதைக்கப் பட்டவற்றை உங்களுடன் பகிர்ந்தாவது ஆறுதலடைவம். ஏன் என்றால் அமைச்சர் என்னுடன் ஓரளவுக்கு நெருக்கமான மனிசன். நான் கேட்டதை நேரடியாய்ச் சொன்னால் மனுசன் முகம் சுழிக்கும் அதனால் தான் வான்முழக்கம் ஊடாக சொல்கிறன். இவர் தன்னுடைய பெயர் எல்லா இடமும் இருக்க வேண்டும் என்பதில் உறுதி யானவராம். வீட்டிலை ஒரு அழகு தேவதை மனைவியாக இருக்கும் போது வேறு அழகு தேவதைகளை நாடுவதிலை ஒரு பெருமை என மனுசன் கருதிறதோடை அமைச்சராய் பொறுப்பேற்ற கையோடை எங்க போனாலும் தன்னுடன் கூட்டித் திரிந்து மாலை போட்டு மகிழ்ந்த இலங்கையின் முன்னாள் அழகு ராணி றோசியையும், வெளிநாடு ஒன்றிற்கு அமைச்சரின்ரை தொல்லை தாங்க முடியாமல், பிரதமர் வெளிநாடு ஒன்றிற்குத் தூதுவராய் அனுப்பிவிட்டார். இதைவிட மாலை போட்டு மகிழ்ந்து திரிஞ்ச ஊடகத்துறையைச் சேர்ந்த லண்டனை தலைமையகமாய்க் கொண்டு இயங்கும் தமிழ் சேவை தொலைக்காட்சி ஒன்றின் பெண் செய்தியாளரும் தனது வருகையை நிறுத்தி விட்டார். இவை ஒருபுறம் இருக்க நிவாரண விநியோகத்தில வந்த வருமானமும் குறைவடையத் தொடங்கின தோடை *A-9* வீதி திருத்த வேலையிலும் எதிர்பார்த்த லாபத்திலை 100 வீதமும் கிடைக்கவில்லையாம். 90 வீதம் தான் கிடைத்ததாம். மகேஸ்வரனுடன் மோதுவதிலை மட்டும் உறுதியாய் தொடர்ந்து இருந்து வரும் அமைச்சருக்கு, தற்போது யாழ்ப்பாணத்தின் புதிய அரச அதிபர் பத்மநாதனிலையும் பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பம் இல்லையாம். தனது உழைப்பிற்கு குறுக்காக நிற்பவர்களில் அரச அதிபரும் ஒருவர் என வெளிப்படையாய் அமைச்சர் கூறுகின்றாராம் தனது நம்பிக்கையான நண்பர்களிடம் மட்டும்.

தற்போது அமைச்சரிற்கு யாழ்ப்பாணம் வருவதிலை ஓர் அளவிற்கு திருப்தி உள்ளதாம். யாழ்ப்பாணம் வந்தால் றான் பங்களாவிலை நிண்டால் கந்தசாமி வாங்கிக் குடுக்கின்ற பனம் கள்ளிலை உலகமே மறந்து விடுகிறதாம். அண்மையிலை குடாநாட்டிற்கு வந்த அமைச்சர் இடம் பெயர்ந்தோர் முகாம்களிற்கு சென்றபோது கந்தசாமி குடுத்த கள்ளிலை கதி கலங்கிப் போன அமைச்சர் வயது போன அம்மாமார் முதல் இளசுகள் வரை கன்னத்திலை கையால் தட்டி விட்டு, சமையல் பாத்திரங்கள் வழங்க முற்பட்ட வேளை, பொது மக்கள் முறுகலடைந்ததை அடுத்து அமைச்சர் தட்டும் நடவடிக்கையை கைவிட்டாராம். எல்லாம் இந்தக் கந்தசாமி செய்தவேலை என்று முதுகிலை சாமிக்குத் தட்டும் போது சாமி மெல்ல அசைஞ்சுதாம். இப்ப பிரதமரின் செல்வாக்குக் குறைஞ்ச அமைச்சர்களில் ஜெயலத்தும் இடம்பிடித்து விட்டார். மாநகரமுதல்வர் செல்லன் கந்தையனின் தொல்லை எனி யாழ்ப்பாணத்தில் இல்லை எண்ட சந்தோசம் ஒருபுறம். மறுபுறம் கந்தசாமியின் கடைக்கண்பார்வை டக்ளஸ் தேவானந்தா முதல் மகேஸ்வரன் உட்பட எந்த அமைச்சர் வந்தாலும், அந்த அமைச்சர்மாரிற்கு பின்னால் திரிவதெண்டால் இவரிற்கு இது கலையாம். பார்க்கப் பயங்கரமான தோற்றம் கொண்ட சாமியார் யாழ்ப்பாணப் பத்திரிகையாளர்களில் மிகுந்த அன்பு உள்ளவராம். தற்போது எங்கள் புனர்வாழ்வு அமைச்சரிற்கு யாழ்ப்பாணத்தில் எல்லாமே சாமியார்தானாம். சாமியாரைப் பற்றி நிறைய கதைத்தார்கள். பின்னர் உங்களுடன் பகிர்கின்றேன்.

- நல்ல நண்பன் நூறு உறவினருக்குச் சமனானவன்
- நம்பிக்கையே வாழ்வு வாழ்வே நம்பிக்கை
- வெற்றியிலே கற்பது சொற்பம் தோல்வியிலே கற்பது அதிகம்
- வாலிபத்திலும் வெள்ளைத் தாளிலும் எதை எழுதினாலும் பதியும்
- உறங்குகின்ற சிங்கத்தைவிட அலைகின்ற நரி மேலானது.
- கல்லும் வைரமும் குருடருக்கு ஒன்றுதான்
- ஒருபோதும் நம்பிக்கையை இழந்துவிடாதே
- நம்பிக்கையும் தைரியமும் வெற்றிக் கிரீடத்தின் இரு எளில்மிகு வைரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழவன் கேள்வி பதில் பகுதி

**அ. றுசாங்கா,**
கந்தரோடை.
சுன்னாகம்.

**கேள்வி:** தமிழவனே அமைச்சர் மகேஸ்வரன் தற்போது எந்தப்பக்கம்?

**பதில் :** றுசாங்கா இந்தக் குழப்பம் எனக்கு முள்ளது. காற்றடிக்கும் போது சாய்வது தானே தற்போதைய நடை முறையாகவுள்ளது.



**த. சத்யா**
உடுப்பிட்டி.

**கேள்வி:** தமிழவனே காதல் நிலைக்குமா? நட்பு நிலைக் குமா?

**பதில் :** சிலருக்கு இரண் டும் நிலைக்கும் சிலருக்கு நிலைக்காமலும் போகலாம். அவர் அவர் மனநிலையைப் பொறுத்தே இவை அமையும்.



**கு. தீபன்**
வவுனியா.

**கேள்வி:** தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டாரா?

**பதில் :** தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் தமிழீழக் கோரிக்கையை கைவிட்டு விட்டதாக இது வரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. ஆனால் தமிழீழத்திற்கு மாற்றீடான தமிழரின் தாயகக் கோட் பாட்டை அங்கீகரித்து சுயநிர்ணய உரிமையுடன் ஒரு தீர்வு முன்வைக்கப் பட்டால் பரிசீலிக்கத் தயார் என கூறியிருக்கிறார். தேசியத் தலைவர் எப்போதும் தீர்க்கமான முடிவே எடுப்பார் என்பது தமிழ் மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.

**ம. பிரதீபன்**
சாவகச்சேரி.


**கேள்வி:** தமிழவனே உங் களால் மறக்க முடியாத சம்பவங்கள் உள்ளதா?

**பதில் :** நிறைய உள்ளது. இதிலும் குறிப்பாக 2002ம் ஆண்டு டிசம்பர் 10ம் திகதி ஸ்ரீலங்காப் பொலீசார் நெல்லியடியில் ஆடிய வெறி யாட்டத்தை என்னால் வாழ்வில் எக்கட்டத்திலும் மறக்க முடியாது.

**தி. யாழினி**
நயினாதீவு

**கேள்வி:** தற்போது இடம் பெற்றுவரும் சமாதானப் பேச்சு வார்த்தைகளிற்கு எதிராக பிரச்சாரம் செய்து வரும் இனவாதக் கட்சிகள் தொடர் பாக என்ன நினைக்கிறீர்கள்?

**பதில் :** இனவாதக்கட்சி களை ஒரு பொருட்டாகக் கருதாமல் விடுவதே சிறந்தது. அவர்கள் திருந்துவதற்கு இனி இடமே இல்லை போலும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ம.வேலுப்பிள்ளை**
மானிப்பாய்.

**கேள்வி:** தொலைபேசியில் தொல்லை கொடுப்போர் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:** இவர்கள் திருந்த இடம் இருக்குமா என யோசிப்பதுண்டு.



**த.சாந்தினி**
கட்டைக்காடு.

**கேள்வி:** காதலில் தோற்றவர்கள் திரும்பக் காதலிக்கலாமா?

**பதில்:** அவர் அவர் மனநிலையைப் பொறுத்தது. ஆனால் காதலிப்பது பிழையாக இருக்காது.



**மு.சுதன்**
வல்வெட்டித்துறை.

**கேள்வி:** எனது காதலி நாக்கை மட்டும் நீட்டுகின்றாவே தவிர, என்னுடன் கதைக்க தயங்குகிறாவே நான் என்ன செய்யலாம்?

**பதில்:** உமக்குப் பச்சைக் கொடி காட்டப்படுவது போல் உள்ளது தயங்காமல் உமது எண்ணத்தை வெளிப்படுத்தும். சமமதமெனறால் வான் முழக்கமும் மகிழ்வடையும்.



**த.இந்துமதி**
பளை.

**கேள்வி:** குடாநாட்டில் உள்ள கிராம அலுவலர்கள் சிலரின் அதிகார வரம்பிற்கு எல்லையில்லையா?

**பதில்:** நிச்சயமாக எல்லை உண்டு. இவர்களின் அதிகாரம் மக்கள் பணி செய்வதே தவிர மக்களை மந்தைகள் போல் எண்ணுவதல்ல.

- புத்தியுள்ளவர்களிடம் வேடிக்கை பார்க்கவே மூடர்கள் இருக்கின்றார்கள்.
- கையிலே மாற்று மருந்து இருக்கிறதென்று விஷத்தை அருந்தலாமா?
- மூடனுக்கும் காளை மாட்டுக்கும் வழிவிட்டு விலக வேண்டும்.
- செல்வத்தை உபயோகித்தால் தீர்ந்துவிடும். கல்வியை உபயோகித்தால் அதிகரிக்கும்.
- அழகானதை நாம் பற்றிக்கொள்கிறோம். பயனுள்ளதை தள்ளிவிடுகிறோம்.
- எத்தனையோ அசுத்தங்களைத் தாண்டிச் செல்லும் சூரியன்தான் பரிசுத்தமாகவே இருக்கிறது.
- தூக்கிலிருப்பவனைக் கயிற்றிலிருந்து விடுவித்துவிட்டால் அவன் உன்னை அதில் மாட்டிவிடுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் பகுதி

**வான்முழக்கம் நடாத்திய கவிதைப் போட்டியில்
முதலாம் பரிசு பெற்ற கவிதை**

## விடுதலை

சமாதான முயற்சியினால் – இலங்கையில்
தமிழ் மக்களுக்கு வெடிச்சத்தங்களிலிருந்தும்
படு கொலைகளிடமிருந்தும்
இனக் கலவரங்களிலிருந்தும் விடுதலை

இயல்பு வாழ்க்கையை இன்பமாய் கழித்திட
மழலைகளுடன் மகிழ்ந்து விளையாடிட
சொந்த பந்தங்களைத் தேடி
சொந்த மண்ணிற்குச் செல்வதற்கு விடுதலை



இன்பமாய் துன்பமின்றி கல்விகற்று
இன்புடன் விளையாடித்திரிந்து
எல்லையில்லா ஆனந்தம் பொங்கி
எல்லையின்றி நிம்மதியில் வாழும் – சிறுவர்களாகிய எமக்கும்
விடுதலை விடுதலை விடுதலை வந்திடுமே?

தொகுப்பு: **அருணாசலம் அகிலன்**
தரம் 10, யா/ நாகர்கோவில் ம.வி.

- மனிதனுக்கு நன்றி செலுத்தாதவன் இறைவனுக்கும் நன்றி செலுத்தமாட்டான்.
- நம்பிக்கையுடன் கூடிய விடாமுயற்சியுடன் உழைத்தால் வெற்றி நிச்சயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வான்முழக்கம் நடாத்திய கவிதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற கவிதை

# விடுதலை

எந்த நாளும் இங்கு போரில்
நொந்து வாழும் துன்பு மாறி
வந்த இந்த வேளை மண்ணின் - வேர்களே
சொந்த மண்ணே நிந்தம் என்று
சந்த தமும் குலவி ஒன்றாய்
சிந்து பாடிச் சேர்ந்து ஆட - விடுதலை

சுற்றி வரக் கடல் இருந்தும்
பற்றி வரும் மீனும் இன்றி
பெற்று உண்டோம் வேறு நாட்டில் - பேதமை
நெற்றி வேர்வை சிந்த நித்தம்
வெற்றி கொண்ட கடலும் ஓடி
பற்றி மீனும் கொண்டு வந்த - விடுதலை

கல்வி கேள்வி ஏதும் இன்றி
வல்ல சிறார் வகையும் குன்றி
இல்ல உலகில் ஒழிந்து வாழ்ந்த - சிறைகளை
மெல்ல முடி மெருகு கூட்டும்
நல்ல ஞானம் நாலும் பெற்று
தொல்லை யின்றி வாழ வைத்த - விடுதலை

ஆடை இன்றி அழகு மாறிக்
கோடை மாரி அவமு மாகிக்
காடு எனக் கருகிப் போன - வயல்களே
கூடை கூடை நெல்லைக் காய்த்துப்
பீடை போக்கி மக்கள் வாழும்
நீடு நிலை கொள்ள இந்நாள் - விடுதலை

அண்ணன் தம்பி அகம் மகிழ்ந்து
எண்ணம் இதயம் கலந்து ஒன்றிப்
பண்ணி இம்மண் புரிந்த உணர்வுப் - பந்தமே
கண்ணில் நீரைத் துடைத்து எங்கள்
பெண்மை சிறார் பேணும் நீதி
வண்ணம் செய்து வாழ்வு உயர - விடுதலை

ஆக்கம்: **சிவராசா கரன்**
(உயர்தர விஞ்ஞானப் பிரிவு)
யா/கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வான்முழக்கம் நடாத்திய கவிதைப் போட்டியில்**
**மூன்றாம் பரிசு பெற்ற கவிதை**

# விடுதலை



பாரில் விடுதலைக்காய்
போராடியோர் பலருண்டு
வியர்வை சிந்தி குருதி சிந்தி
மானிடத்தின் விடுதலைக்காய்
மண்ணில் புதையுண்டோர் பலருண்டு

வேதனைகள் எம்மை வந்து வாட்டிட
சோதனைகள் எம் வாழ்வினைப் பறித்திட
தமிழின் விடுதலைக்காய் உறங்கியவர்கள் ~ எம் மாவீரர்கள்
விடுதலை தவறிக்கெட்டு பாழ்பட்டு நின்ற
எம் தேசத்தை தம்வசம் ஆக்கியவர்கள் ~ எம் புலி வீரர்கள்

சொல்முறையைக் கேட்காத பகைவனை
வன்முறையால் வென்றவர்கள் எம் வீரர்கள்
தமிழ் மக்களின் குருதியில் விடுதலையென்ற
ஓடங்கள் ஓடிக்கொண்டே இருக்கின்றன
விடுதலையை நோக்கிப் பாயும் ஓடங்களை
புயல் என்னும் காற்று அடிக்கத்தான் செய்கிறது
புயலையும் மேவும் எமது ஓடங்கள்
என்றும் தமது இலட்சியத்தை அடையும்?

**எம்.மைதிலி**
சேதுபதி
துன்னாலை மத்தி,கரவெட்டி.

**குறிப்பு –**

**வான்முழக்கம் நடத்திய கவிதைப் போட்டியில் சிறப்புப் பரிசு பெறும் அதிஷ்டசாலிகள்.**

**செல்வமாணிக்கம் சிந்து,**
செல்வஸ்தலம்
வல்வெட்டி
வல்வெட்டித்துறை.

**பிரதீபா கமலநாதன்**
13 கலை
யாழ். மானிப்பாய் மெமோறியல்
ஆங்கிலப் பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர்களே........

1) வான்முழக்கம் நடத்திவரும் கவிதைப் போட்டியில் இம்முறை "அன்பு" என்ற தலைப்பில் கவிதைப் போட்டியினை நடத்தவுள்ளது. போட்டியில் பங்குபற்றும் வாசகர்கள் உங்களது ஆக்கங்களை 25.05.2003 ற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாய் அனுப்பிவைக்கவும்.

வான்முழக்கம் "**உறுதி**" என்ற தலைப்பில் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதலாம் இடத்தை

**செ.பிரதீபா**
**க.பொ.த உயர் தரம்**
**கலைப் பிரிவு,**
**யாழ். விக்னேஸ்வராக் கல்லூரி,**
**கரவெட்டி.**

பெற்றுள்ளார். ஏனைய பலர் போட்டியில் பங்கு பற்றினாலும் நடுவர் குழு ஏனைய சிறுகதைகளைப் பரிசிற்கு தேர்ந்தெடுக்கவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்
-ஆ.ர்.

2) வான்முழக்கம் இம்முறை சிறுகதைப் போட்டி ஒன்றையும் நடத்தவுள்ளது. போட்டிக்கான தலைப்புக்கள் "**கனவுகள்**" அல்லது "**நினைவுகள்**" இத்தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து போட்டியில் பங்குபற்றி பரிசில்களை வெல்லுங்கள். போட்டிக்கான முடிவு திகதி 25.05.2003.

**ஆக்கங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-**

**வான்முழக்கம்**
**பிரதம ஆசிரியர்**
**வே.தவச்செல்வம்.**
**284, பலாலி வீதி,**
**கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**

- புகழுக்காக நேர்மையை மறந்துவிடக்கூடாது.
- செல்வம் நிலைக்க பிறர் பொருளை விரும்பலாகாது.
- தன்னை அறிந்தவன் உலகத்தையும் அறிவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதில் எது? காதல்

எண்ணமறியாது நடத்தை தெரியாது
கடற்கரை அழைப்பது காதலா
கண்ட கண்ட பெண்ணைப் பார்த்து கண்ணடித்து
செருப்பு வாங்குவது காதலா
செல்வத்தின் மத்தியில் அதிகாரம் கொண்டு
பெண்ணை அடிமைப்படுத்துவது காதலா
அழகுப் பெண்ணைக் கண்டு விசிலடித்து
பின்னால் செல்வது காதலா
தனது தேவையைப் பொறுத்து பெண்ணைக்
காதலித்து பின்பு கைவிடுவது காதலா
திருமணம் செய்து ஆசையை நிறைவேற்றிப்
பின்பு சிறையில் அடைப்பது காதலா
செல்வத்தைப் பெற ஆவல்கொண்டு
பெண்ணைத் திருமணம் செய்வது காதலா



ச.கவிதா
உடுத்துறை.

# துடிப்பு

உன் நினைவுகள் நிழலாடுவது நிஜமானாலும்
என் உணர்வுகளையும் உண்மைகளையும் கூறத் துடிக்கிறேன்
கண் இமைக்கும் நொடிப் பொழுதிலும்
உன் நினைவுகளே நிழலாடுகின்றன
எனினும் எனக்கென்று ஒரு உறவு
இறைவனால் நிச்சயிக்கப்பட்ட பின்பு
எப்படி இதைப் பகிரமுடியும் உன்னுடன்
எனினும் உனக்கு மட்டும் தைரியத்தை
வரவழைத்து உண்மைகளை
கூறத் துடிக்கிறேன்
மறு ஜென்மம் ஒன்று இருந்தால்
சந்திப்போம் என்று சபதம் எடுக்கத்
துடிக்கிறேன்



தனா
கந்தர்மடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூவ முடியாத குயில்

கூவமுடியாத குயில் நான்
கூவ விரும்பாத குயிலின் மௌனத்தை
சுமக்க முடியாமல் நான்
மௌனத்தை வார்த்தைகளாக்கிக் கொண்டிருக்கிறேன்
என் வதனங்களில் புன்னகைகளையும்
கண்ணீர்த் துளிகளையும் சந்தித்திருக்கலாம்
இப்போது இந்தப் பூ தேனை மட்டுமல்ல
தீயையும் சுமக்கின்ற பக்குவத்தை - அடைந்துவிட்டது
நாம் பெருமைப்படுவது என்னவெனில்
வாழ்க்கைப் போராட்டமும்
தேசப் போராட்டமும் கைகுலுக்கிக் கொள்கின்ற
ஒரு காலகட்டத்தில்
தீயைச் சுமக்கின்ற பக்குவம் வந்ததையிட்டு
ஆகையால்
தீயைச் சுமக்கின்ற பக்குவம் தந்தவன் நீ
உன்னை வாழ்த்தத்தான் முடியும்.

**நீர்வையின் இளமொட்டு**

ஒருவரை ஒருவர் காதலிக்கிறார்களே காதல் *(Love)* எனும் எழுத்துக்கு அர்த்தம் தெரிந்தவர்களா? என்று பார்ப்போம்.

| | | | |
|---|---|---|---|
| *L - Look* | | கா - | காத்திருத்தல் |
| *O - Observe* | | த - | தவித்தல் |
| *V - Verity* | | ல் - | இல்லாமல் போதல் |
| *E - Enjoy* | | | |

என ஆங்கிலத்தில் எனத் தமிழ் மொழியில்

## எண்ணங்கள்

எம்மைப் பற்றிய எமது நம்பிக்கை ஆரம்பத்தில் சின்னச் செடிதான். எம்மைக் கேலி செய்கின்ற கூட்டம் ஆட்டுமந்தை தான்! கொஞ்சம் அசந்து விட்டால் அந்த ஆட்டுமந்தை எமது நம்பிக்கைச் செடியை மேய்த்து நாசமாக்கி விடுகின்றன.

எமது நம்பிக்கைகள் வளர்ந்து கம்பீரமான விருட்சமாகி நின்றால் இந்த ஆட்டு மந்தை இதன் நிழலில் ஒதுங்க வரும். குனிந்து பார்த்துக் கேலி செய்த மூடர்கள் நிமிர்ந்து பார்த்து தலைவரே என்பார்கள்.

எண்ணங்கள் தான் வாழ்வை நிர்ணயிக்கின்றன. உயர வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர்கள் உயர்வது நிச்சயம்.

**G. அமலன்,**
பம்பலப்பிட்டி. கொழும்பு - 04.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

# சங்கடம்

அந்தக் கொடூரமான இருட்டு என்னும் அரக்கனை வென்றுவிட்ட கர்வத்தோடு சூரியதேவன் வெற்றிநடை போட ஆரம்பித்திருந்தார். அந்த அருமையான காலை வேளையில், தன் உணர்வுகளைத் தொலைத்த நிலையில் யன்னல் கம்பியில் முகம் புதைத்து எங்கோ வெறித்தபடி நின்ற வைஷ்ணவியை அம்மாவின் அழைப்பு நிஜ உலகுக்கு கொண்டு வந்தது.

"வைஷ்ணவி என்னம்மா முகம் ஒரு மாதிரியிருக்கே" என்ற அம்மாவின் அன்பு மொழிக்கு "ம்..... இல்லியேம்மா.........." என்ற வைஷ்ணவியின் பதிலுடன் அம்மா தன் வேலையினுள் மூழ்கிப்போனாள். ஆனால் வைஷ்ணவியின் நினைவுகளோ பின்னோக்கி நீந்தத் தொடங்கியது.

அன்று உயர்தரக் கல்விக்காக புதிதாக கால் பதித்த கல்லூரியின் தமிழ்த்தினவிழா. அதில் புதுமுக மாணவியான வைஷ்ணவி "வேகாத வெயிலிலும் வச்சிரமாய் காட்சி தரும் என் சக மாணவ மணிகளுக்கும்" என வடித்துச் சென்ற கவித் தொகுப்பைத் தொடர்ந்து கைதட்டல் ஒலி வானை முட்ட மேடையை விட்டு இறங்கிய வைஷ்ணவியை, நிகழ்வைத் தலைமை தாங்கி வழிநடத்திய பிரத்தியூனன் "கவிதை நல்லா இருந்திச்சுது" என்ற பாராட்டுதலுடன் அறிமுகமாகிக் கொண்டான்.

தொடர்ந்து கல்லூரி வளாகத்தில் சந்திக்கக் கிடைத்த சந்தர்ப்பங்களிலும் சிறு புன்சிரிப்புடனே பிரிந்து சென்றவர்களைத் தொடர்ந்து, நடந்த ஏனைய கல்லூரி விழாக்கள் நட்பு என்னும் பாதையில் வழிநடக்க வைத்தது. எது எப்படியாகிலும் இருவரது கல்வித்துறைகளும் வேறுவேறு கோணத்திலிருந்தாலும் இருவரிடையேயுமிருந்த சில விசேட பண்புகள் இருவரையும் இணைத்து வைத்ததென்பதில் எவ்வித ஐயமுமில்லை.

எப்படியோ ஏனைய சினேகிதர்களிடம் கொண்டுள்ள வெறும் நட்பென்று நினைத்து பிரத்தியூனனது நினைவுகளை ஒதுக்க நினைத்த வைஷ்ணவிக்கு நிஜமான சந்தோசத்தில் உதடுவிரித்துச் சிரிக்கும் பிரத்தியூனனின் சிரிப்பு கண்முன் நிழலாடி நெருங்கிக் கொண்டிருந்த உயர்தரப் பரீட்சைக்கான படிப்பிலே கவனம் செலுத்தவிடாது தடுத்தது.

அப்பொழுதுதான் பிரத்தியூனனும் இவ்வாறு உணர்வுகளால் உந்தப்படுவானோ என சிந்திக்கத் தொடங்கினாள். அடுத்து வந்த சந்தர்ப்பங்களிலெல்லாம் பிரத்தியூனனை ஊன்றிக் கவனிக்கலானாள். வைஷ்ணவியை கண்டவுடன் கண்களில் மின்னும் அலாதியான ஒளியும், சிறிது நேரம் காணாவிடில் கால்களை மாற்றி நின்று கண்களை ஓடவிடுவதும், என்ன விடயமென்றாலும் வைஷ்ணவியுடன் ஆவலாகப் பகிர்ந்து கொள்ளத் துடித்தமையும் வைஷ்ணவியின் ஊகத்தைச் சரியாக்கிச் சென்றது.

தன்னுள் ஏற்பட்டு ஆர்ப்பரிக்கும் வினோத உணர்வினுள் சிக்குண்ட வைஷ்ணவி பிரத்தியூனனுக்கும் அதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவஸ்தை ஏற்பட்டிருக்கும் என்று நிம்மதி அடைந்தாலும், ஏன் என்னுடன் எதுவுமே பேசவில்லை. முதலில் படிப்பு முடியட்டும் என நினைக்கிறாரோ, பிறகு அவராகவே பேச்செடுப்பார் நிச்சயம் என மனதுக்குள் ஆயிரம் கணக்குப் போட்டபடி தனது உயர்தரப் பரீட்சைக்கு ஊன்றிப் படிக்க ஆரம்பித்தாள்.

காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. பரீட்சைகள் முடிவுற்றன. கல்லூரியின் கடைசி நாளும் மெல்ல மலர்ந்தது. கல்லூரி வளாகத்திலே இறுதிநாளைக் கொண்டாட வழக்கத்தை விட அதிகமாகச் சிரித்துப் பேசியவர்களும், கண்ணீருடன் நின்றவர்களுமாக மாணவ மாணவியர் குழுமியிருந் தனர். வைஷ்ணவி அனைவரிடமும் விடை பெற்று மைதானத்து வேப்பமரவேரிலே அமர்ந்து கொண்டாள். பிரத்தியூனனும் தன்பங்கு பிரியா விடை பெற்றுக் கொண்டு வைஷ்ணவியை நாடி வந்தான்.

வைஷ்ணவி மனதில் ஒரு பூகம்பமே உருவாகியது. பேசவகையற்று மணலிலே வைஷ்ணவி வைஷ்ணவி என பலமுறை எழுதி அழித்தாள். ஆனால் பிரத்தியூனனோ வழமையான பேச்சுக்களுடன் "வைஷ்ணவி இனிமேல் அடிக்கடி சந்திக்க முடியாது. நீ கவிதை எழுதுறதை விட்டிடாதை. நீ கெட்டிக்காரி, உனக்கு நல்ல எதிர்காலமிருக்கு" என ஏதேதோ கதைத்துக் கொண்டிருந்தான். மௌனமாயிருந்த வைஷ்ணவி தலை நிமிர்ந்து அவன் கண்களை ஊடுருவிப் பார்த்தவள் மெல்ல வாய் திறந்து "பிரத்தியூனன் நீங்க என்னைப் பற்றி என்ன நினைக்கிறீங்க" என கேட்டாள். பிரத்தியூனனின் கண்கள் அதிசயமாய் விரிந்தது. "நீ கெட்டிக்காரி, அழகானவள், அன்பானவள்" என ஏதேதோ சொல்லிக் கொண்டு போனான். மௌனமான வைஷ்ணவி "பிரத்தியூனன் நான் நான்........ உங்களோட ஜென்மமுழுக்க ஒன்றாயிருக்க ஆசைப்படுறன்" எனத் திக்கித் திணறிச் சொல்லி முடித்தாள்.

மௌனம் அவர்களிடையே போர்த்தி நின்றது. மௌனத்தை முதலில் உடைத்த பிரத்தியூனன் "ஏய் வைஸ் உன்னோடை நான் அந்த நோக்கத்தில பழகேல, அப்பிடி உன் மனசு சலனப்பட்டுப் போனால் என்னை மன்னிச்சிடு. என்னோடை ரசனை எல்லாம் உன்னட்டை அப்பிடியே இருந்ததால் ஒரு ஈடுபாடு. ஈர்ப்பு அவ்வளவுதான். உன்னை நான் உயர்ந்த ஒரு நட்பு என்ற கோணத்தைவிட, வேறு எந்தக் கோணத்திலும் வைத்துப் பார்த்ததே இல்லை. இந்த மாதிரி உன்னட்டை ஆசை இருக்குமெண்டால் நான் உன்னோடை பழகியிருக்கவே மாட்டான்" என்று கூறியவன் அங்கு நிற்கப் பிடிக் காதது போல் வேகமாய் வெளியேறினான்.



அதன் பின் நடந்ததெல்லாம் கனவுபோல் நடந்தேறியது. பரீட்சை முடிவுகள் வெளியாகியிருந்தன. பிரத்தியூனனும், வைஷ்ணவியும் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியிருந்தனர். ஆனால் வைஷ்ணவி தன் சொந்த ஊரை என்ன மண்ணையே விட்டு கனடா மண்ணிற்குத் தூரமாகிப்போனாள்.

காலங்கள் கரைந்தன. நீண்ட ஏழு வருடங்களுக்குப் பின்னர், கனடா நாட்டின் ஒட்டாவா பல்கலைக்கழகம் பிரசவித்த விஞ்ஞானமானியாகச் சொந்த மண்ணில் கால் பதித்தாள் வைஷ்ணவி. பிரத்தியூனன் ஒரு வங்கி முகாமையாளராகக் கடமையாற்றிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தான். அந்த நீண்ட கால இடைவெளி இருவரையும் புடம் போட்டிருந்த படியால், மனந்திறந்து இருவரையும் சினேகத்துடன் நெருங்க வைத்தது. கல்லூரி வாழ்வுடன் முற்றுப்பெற்ற வசந்தகாலம் இருவரிடையேயும் பூக்கத் தொடங்கியது.

கிடைத்த நேரங்களில் இருவரும் சந்தித்து, மனம் திறந்து பேசினர். சொந்தவிடயங்கள், பொதுவிடயங்கள் என அலசி ஆராய்ந்தனர். அன்றும், வழமையான அலட்டல்களுக்கிடையில் திடீரென "வைஸ் உன்னட்டை ஒன்று கேட்க வேணும்" என்றான். தலை நிமிர்ந்த வைஷ்ணவி "கேட்டால் போச்சு ஏன் யோசனை" என்றாள். "வைஸ் நீ ஏன் இன்னும் கல்யாணம் செய்துக்கவில்லை" எனக் கேட்டு வைத்தான். மௌனமான வைஷ்ணவி விழிவிரித்துப் பார்த்து, "கல்யாணம் கட்டிக்கத் தோன்ற வில்லை" எனக் கூறி சிரிப்பினூடே விடை பெற்றாள்.





வீட்டுக்குச் சென்ற பிரத்தியூனனுக்கு மனசு இறக்கை கட்டிப் பறந்தது. அடியேய் என் இனிய சினேகிதியே உன்மனம் புரிந்துபோய் விட்டதடி. முழுசாய் ஏழு வருடங்களை எனக்காகக் காத்திருந்து கடத்தி விட்டாயே. இல்லை, இல்லை தவமே செய்திருக்கிறாய் என்ற எண்ண ஓட்டத்துடன் உறங்கிப் போனான்.

மீண்டும் சந்தித்துக்கொண்ட இருவரும் மௌனமாக விழிகளால் பேசிக்கொண்டனர். வழமையான சிரிப்புடன் கண்களில் அர்த்த ஒளியுடன் கலகலத்துச் சிரித்த வைஷ்ணவியை அதிசயமாகப் பார்த்தான். சில நிமிடங்களைத் தொலைத்த பின்னர். "வைஸ் உன்னைப் புரிஞ்சுகொள்ள முழுசாய் ஏழு வருடத்தை எடுத்திட்டன். ஆனாலும் புரிந்து கொண்டதையிட்டு சந்தோசப்படுகிறன். வந்து.......... நான் உன்னை மனப்பூர்வமாக் காதலிக்கிறன். அது எனக்கு இவ்வளவு நாளும் தெரியாமல் போச்சு" என கூறிமுடிக்க முன்னர் கையமர்த்திய வைஷ்ணவி "வேண்டாம் பிரத்தியூனன் நான் சொல்லுவதை கேளுங்கோ. வார்த்தைகளைக் கொட்டினா திரும்ப எடுக்கேலாது. அனாவசியமா உங்களைக் குழப்பிக் கொண்டு என்னென்னவோ பேசுகிறீர்கள். நீங்கள் என்னைப் புரிஞ்சு கொண்டன் என்று சொன்னீங்களே அதுதான் இல்லை. நீங்கள் எப்ப எனக்கு ஒரு உயர்ந்த நட்புக்கு வழிகாட்டினீங்களோ அன்றிலிருந்தே நான் நானாய் மாறிட்டன்.

அற்புதமான நமது நட்பைக் கெடுத்திடாதீங்க. நீங்கள் எனக்கு எல்லோரை விடவும் உயர்ந்தவர். இந்த மாதிரி நட்பு அமையிறது அபூர்வம் நான் அதை மாத்தி அமைக்கமாட்டேன். ஏனெனில் நீங்கள் என்னோடை உயர்ந்த நட்பு" என்று கூறி தம்மிடையேயான நட்பை பிரத்தியூனன் புரிந்து கொள்ளவேண்டு மென அவனைப் பரிதாபமாகப் பார்த்தாள் வைஷ்ணவி.

ஆனால் பிரத்தியூனனோ கல்களிலே முகம் பதித்து ஏற்பட்ட சங்கடத்தை விழுங்க முடியாது மணலில் ஏதோ கிறுக்கிக் கொண்டிருந்தான்.

தமி—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் பல்தேசியக் கம்பனிகளின் முக்கியத்துவம்

நிறுவனம் ஒன்று பல நாடுகளில் கிளைகளை அமைத்து செயற்படும் போது அவை பல்தேசிய நிறுவனமாகக் காணப்படுகின்றது. அந்த வகையில் கம்பனிகளே இன்று பல நாடுகளில் கிளைகளை அமைத்து செயற்படுகின்றது. இதற்கு உதாரணமாக பாட்டா, சிங்களா, கொக்கொககோலா நிறுவனங்களைக் குறிப்பிடலாம். பல்தேசிய நிறுவனங்கள் தலைமைக் காரியாலயத்திலிருந்து கிளைகளைக் கட்டுப்படுத்துகின்றது. இவைகளில் உழைக்கின்ற இலாபம் தலைமைக் காரியாலயங்களைச் சென்றடைகின்றது.

பல்தேசியக் கம்பனிகள் சர்வதேச சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. சர்வதேச சந்தைப்படுத்தல் என்பது நிறுவனம் ஒன்று சொந்த நாட்டின் அரசியல் எல்லைக்குள் அப்பால் ஏனைய நாடுகளுக்கு பொருட்களையும், சேவைகளையும் சந்தைகளை இலக்கு வைத்து உள்நாட்டில் உற்பத்தி செய்து திட்டமிடப்பட்ட சர்வதேச இலக்கு சந்தைக்கும் துணைக்கம்பனிகள் ஊடாகவும் இச்சந்தைப்படுத்தலை மேற்கொள்ளலாம்.

இத்தகைய பல்தேசிய நிறுவனங்களுடைய செயற்பாடுகளானது 3ம் உலக நாடுகளுக்கு சாதகமானதா அல்லது பாதகமானதா என்ற கருத்துக்கள் காணப்படுகின்றது. இத்தகைய நிறுவனங்கள் 3ம் உலக நாடுகளுக்கு சாதகமானவை எனக் கருதுவோர் பின்வரும் அம்சங்களை முன் வைக்கின்றனர்.

1. வளர்ச்சியடைந்த நாடுகள் போதியளவு மூலதன வசதியினைக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் நாடுகளில் மூலதனப் பிரச்சினை பெருமளவில் காணப்படுகின்றன. ஆகவே இத்தகைய முதலீட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடியளவுக்கு முதலீடுகளை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

2. பல்தேசிய நிறுவனங்கள் இவ்வாறு முதலீடுகளை மேற்கொள்ளும் போது நவீன தொழில் நுட்பத்தையும் 3ம் நாடுகளுக்கு கொண்டு வருகின்றது. இதனால் உற்பத்தி வர்த்தகம் நவீன தொழில் நுட்பத்தை கொண்டிருப்பதனால் உற்பத்தி வர்த்தகம் அதிகரிக்கின்றது.

3. மூன்றாம் உலக நாடுகளில் வளங்கள் போதியளவு காணப்படுகின்றன. ஆனால் இவ்வளங்கள் சரியான முறையில் பயன்படுத்தப்படவில்லை. இத்தகைய பல்தேசிய நிறுவனங்கள் உட்பிரவேசிப்பதனால் இவ்வளங்கள் சரியான முறையில் பயன்படுத்தப்படுகின்றது.

4. இத்தகைய பல்தேசிய நிறுவனங்களின் ஈடுபாடானது அதிக வேலைவாய்ப்பினை மூன்றாம் உலக நாடுகள் உள்நாட்டிலும் வழங்குவதற்கு உதவுகின்றது. அது மட்டுமன்றி வள உடமையாளர்களும் வருமானத்தைப் பெறக் கூடியதாக இருக்கின்றது. வேலை வாய்ப்பினாலும் வளப் பயன்பாட்டினாலும் அதிக வருமானத்தைப் பெறக்கூடியதாக இருக்கின்றது. வாழ்க்கைத்தர உயர்விற்கும் அடிப்படையானதாக அமைவதற்கு நிறுவனங்கள் காரணமாக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பல்தேசிய நிறுவனங்களுடைய ஈடுபாடானது 3ம் உலக நாடுகளின் உற்பத்திகளை மேற்கொள்வதற்கு அடிப்படையாகின்றது. 3ம் உலக நாட்டு மக்களும் குறைந்த விலையில் தொழில் நுட்பம் வாய்ந்த பொருட்களை பெறக் கூடியதாக இருக்கின்றன.

6. பல்தேசிய நிறுவனங்கள் ஒருசில உற்பத்திகளில் ஈடுபடுகின்றது அதனால் அந்நாடுகள் உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சி அடைகின்றது. இதனால் நாடுகள் சர்வதேச சிறப்பித்துவம் அடைகின்றது. இத்தகைய சர்வதேச சிறப்பித்துவத்தினால் எல்லா நாடுகளும் குறைந்த விலையில் பொருட்களைப் பெறக் கூடியதாக இருப்பதால் ஒப்பீட்டு நயத்தினை அனுபவிக்கக் கூடியதாக இருக்கின்றது.

ஒப்பீட்டு நயம் என்னும் போது ஒரு நாடு பொருட்களை உற்பத்தி செய்வதனை விட இறக்குமதி செய்வது அப்பொருட்கள் செலவு குறைந்ததாக அமைந்திருக்கும்.

பல்தேசிய நிறுவனங்கள் 3ம் உலகாடுகளில் உற்பத்தியில் ஈடுபட்டு உள்நாட்டிலும் ஒருபகுதியினைச் சந்தைப்படுத்துவதனால் இறக்குமதிகள் குறைவடைகின்றது. இதனால் அந்நிய செலாவாணிப் பிரச்சினை குறைவடைகின்றது.

பல்தேசிய நிறுவனங்களில் இத்தகைய ஈடுபாடு தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையானதாக அமைகின்றது.

ஆனாலும் பல்தேசிய நிறுவனங்களுடைய செயற்பாடானது 3ம் உலகநாடுகளுக்கு பின்வரும் வழிகளில் பிரதிகூலமுடையதாக விமர்சிக்கப்படுகிறது.

1. பல்தேசிய நிறுவனங்களின் இலாபம், வருமானம் என எடுத்துச் செல்கின்றது. இவ்வாறு எடுத்துச் செல்வதால் 3ம் உலக நாடுகள் சுரண்டலுக்கு உட்படுகின்றது. இதனால் குடியேற்ற ஆட்சியில் சுரண்டப்பட்ட நாடுகள் மீண்டும் பல்தேசிய அமைப்புக்களினால் சுரண்டப்படும் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றது.

2. அதிகளவு மூலதனத்தினையும் நவீன தொழில் நுட்பத்தினையும் அடிப்படையாகக் கொண்ட பல்தேசிய நிறுவனங்களின் முதற் செறிவான உற்பத்தி முறையில் ஈடுபடுகின்றது. இதனால் 3ம் உலக நாடுகளின் அதிகளவு வேலைவாய்ப்பினை வழங்க முடியாது இருக்கின்றது. இதனால் ஏற்கனவே வேலையில்லாப் பிரச்சினையை அனுபவிக்கும் 3ம் உலக நாடுகள் மேலும் வேலையில்லாப் பிரச்சினையை அதிகளவு அனுபவிக்க வேண்டி இருக்கின்றது.

3. ஒரு நாடு திட்டமிட்டு உற்பத்தி வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலமே சுயதேவையினைப் பூர்த்தி செய்யக் கூடியதாக அமைவதற்கு இவற்றின் செயற்பாடு அமைகின்றது. இத்தகைய நிறுவனங்களின் உற்பத்திகளுடன் உள்நாட்டு உற்பத்திகள் போட்டியிட முடியாத நிலை காணப்படுகின்றது. ஏனெனில் பல்தேசிய அமைப்புக்களின் உற்பத்திகள் தரமானவையாகவும், விலை குறைவானதாகவும் காணப்படுகின்றது. இதனால் தரம் குறைவாகவும் விலை உயர்வாகவும் காணப்படுகின்ற உள்நாட்டு உற்பத்திகள் பாதிப்படைகின்ற சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பல்தேசிய நிறுவனங்கள் செயற்படும் போது ஒரு நாட்டின் உற்பத்திகள் இறைமை பாதிக்கக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. உற்பத்தி, வர்த்தகம் என்ற போர்வையில் ஒரு நாட்டில் அரசியல் எல்லைக்குள் ஊடுருவி பின்னர் அந்நாட்டின் அரசியலில் தலையிடுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால் அரசியல் இறைமை பாதிக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படும்.

ஆகவே பல்தேசிய நிறுவனங்களுடைய செயற்பாடானது 3ம் உலக நாடுகளுக்கு சாதகமான விளைவுகளை ஏற்படுத்தினாலும் 3ம் உலக நாடுகளுக்கு அனுகூலம் உடையதாகவே அமைகின்றது.

**இ.சாரங்கன்**

# கணனிக் குற்றங்கள்

கம்பியூட்டரை இயக்குவது குற்றமாகுமா? கம்பியூட்டர்கள் இன்றி இயங்க முடியாத நிலையில் இன்று பல துறைகள் காணப்படுகின்றன. அதேவேளை இத்துறைகளுக்குத் தடையாகப் பல்வேறு குற்றங்களைச் செய்வதற்கு கம்பியூட்டர்கள் பயன்படுத்தப்படுகின்றன.

"கம்பியூட்டர் என்பது ஓர் இலத்திரனியல் சாதனம்" அது எப்படிக் குற்றம் செய்யும்? குற்றங்கள் செய்வதற்காக மனிதர்களினால் திட்டமிட்டுச் செய்யப்படும் ஓர் சதியே கணனிக் குற்றங்களாகும். இக்குற்றங்களை 2 வகையாக நோக்கலாம்.

1. கம்பியூட்டரின் உதவியால் செய்யப்படும் குற்றங்கள்.
2. கம்பியூட்டர் தொடர்புடைய குற்றங்கள்.

அனுமதியில்லாமல் மற்றவர்களுடைய கம்பியூட்டர்களைப் பயன்படுத்தி ஆணைத் தொகுப்புக்களைத் திருடுவது, நகல் எடுப்பது, விற்பனை நோக்கில் திருட்டுத்தனமாக நகல் எடுப்பது, போன்றவை கம்பியூட்டரின் உதவியால் செய்யப்படும் குற்றங்கள் ஆகும்.

கம்பியூட்டர் தொடர்புடைய குற்றங்கள் என்பது மற்றவர்களுக்குத் தேவைப்படாத தகவல்களை அவர்களுடைய கம்பியூட்டர்களுக்குள் வலியத் திணிக்கும் வைரஸ் பிரச்சினையாகும்.

### வைரஸ் என்றால் என்ன?

வைரஸ் என்றதுமே கண்ணுக்குத் தெரியாத கிருமிகள் என்ற எண்ணமே சாதாரணமான எவருக்கும் ஏற்படும் ஆனால் கணனி வைரஸ் என்பது நவீன உலகத்தில் கையாளப்படும் ஒரு நாசகார உற்பத்தியாகும். கம்பியூட்டர் புரோகிராமிங்கில் *(COMPUTER PROGRAMMING)* தமக்கு உள்ள அறிவை ஆக்கத்திற்குப் பயன்படுத்தாமல் அதை அழிவிற்குப் பயன்படுத்துவோரால் உருவாக்கும் புரோகிராம்களே "வைரஸ்" என அழைக்கப்படும். இவை ஆங்கில எழுத்துக்களைக் கொண்டும் இலக்கங்களைக் கொண்டும் எழுதப்பட்டவை. இவற்றைக் கணனி மொழியில் கூறுவதானால் சொப்ட்வெயார் *(SOFT WARE)* எனலாம். கம்பியூட்டர் புரோக்கிராம் என்பது ஏதாவது ஒரு தேவையின் நிமித்தம் எழுதப்படும். உதாரணமாக *(MICROSOFT WORD)* மைக்ரோசொப்ட் வேர்டை எடுத்தோமானால் அது முறகாலத்தில் தட்டச்சு இயந்திரத்தை உபயோகித்துச் செய்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையை மிகவும் உன்னதமாக, அழகாக, தரமாக, இலகுவாகச் செய்வதற்கு உபயோகிக்கப்படும். ஆனால் ஒரு வைரஸ் புரோகிராம் என்பது பெரும்பாலும் ஒரு கணனியைச் செயலிழக்கச் செய்ய அதிலிருக்கும் தரவுகளை அழித்துவிட கணனியைப் பாவனைக்கு உதவாத படி ஆக்கவென இன்னோரன்ன அழிவுகளை செய்யவென எழுதப்படு கின்றன.

### கணனி வைரசுகள் பரவுவது எப்படி?

ஒரு புரோகிராம் ஆனது கணனியைச் செயலிழக்க எனச் செய்யப்பட்டுள்ளது எனத் தெரியுமானால் அதை எவரும் வாங்க மாட்டார்களே? இது விடயத்தில் வைரஸ் புரோகிராம்களை உருவாக்குபவர்கள் மேலும் புத்திசாலிகள். அவர்கள் தங்களது வைரஸ் புரோகிராமை எழுதும் போது அது பரவுவதற்கான வழிமுறை களையும் சேர்த்தே புரோகிராம் செய்வார்கள். உதாரணமாக வைரஸ் புரோகிராம் உள்ள ஒரு கணனியிலி ருந்து நாங்கள் தரவுகளைப் பிரதி செய்கின்றோம் எனில் நாங்கள் பிரதி செய்துகொண்டிருக்கும் போதே அந்தத் தரவுகளுடன் இணைந்து அழையா விருந்தாளியாக நுழைந்து விடும் இந்த வைரஸ். இவ்வாறு நுழைவது பிரதி செய்பவருக்கு தெரிய வாய்ப்பில்லை. ஏனெனில் பெரும்பா லான வைரஸ்கள் தாம் புகுந்து விளையாடுகின்றோம் என்ற செய்தியை கணனித்திரையிலோ அல்லது வேறு எந்த முறையிலோ தெரிவிப்பதில்லை. தான் பிரதி செய்த தகவல்களில் இந்த வைரஸ் புரோகிறாம் ஒட்டிவிட்டுக் கொண்டதை அறியாத பாவனையாளர் தான் பிரதி செய்தது ஒரு டிஸ்க் *(DISK)* ஆயின் அதை வேறொரு கணனியில் பயன்படுத்துவார். அந்த நேரத்தில் வைரஸ் புரோகிராம் இல்லாத மற்றைய கணனிக்கும் வைரஸ் வந்து விடுகின்றது. இதைத்தான் கணனி "வைரஸ் தொற்று" என்பார்கள். பொதுவாக கணனி வைரஸ் புரோகிராமை எழுதியவர்கள் அது வேகமாகப் பரவ வேண்டும் என்பதற்காக சில முறைகளைக் கையாளுவார்கள். இவர்கள் அனேகமாகக் கையாளும் முறை கம்பியூட்டர் கேம்ஸ் *(COMPUTER GAMES)* காரணமாகக் கணனியைச் சிலர் பொழுது போக்கிற்காகவும் பயன்படுத்துவர். இதனால் கம்பியூட்டர் கேம்ஸ் புரோகிராம்கள் பாவனையா ளர்களுக்கும் அதிலுள்ள ஈடுபாடு காரணமாக வெகுவிரைவில் பிரதி செய்யப்பட்டு கைமாறும் சாத்தியக்கூறு அதிகமாகக் கொண்டுள்ளது. இதனால் வைரஸ் புரோகிராம்கள் சாதாரணமாக ஒரு கம்பியூட்டர் கேம் புரோகிராமுடன் இணைக்கப்பட்டு பரவ விடப்படும். ஆனால் எல்லா கேம்களிலும் வைரஸ் தொற்று ஏற்படுமன்றோ அல்லது கேம் அல்லாத வேறு புரோகிராம்களால் வைரஸ் தொற்று ஏற்படாதென்றோ கூறமுடியாது.

இன்டர்நெட் இன்று மனிதனுக்கு எவ்வளவு உதவி புரிகின்றதென்றால் எந்தப்பாகத்தில் நடைபெற்ற விடயமானாலும் எமது அருகிலேயே கொண்டு தரக்கூடிய நிலையில் இருப்பதனாலும் இன்டர் நெட் பாவனை வேகமாக வளர்ந்து வருவதனாலும் அண்மைக்காலமாக வைரஸ் பரப்புவோருக்கு ஒரே குஷி அதிலும் "மெலிஸா" *(Melissa)* என்ற வைரஸ் வந்து கணனியைத் தாக்குகின்றது. இந்த வைரஸ் வேர்ட் 97 *(WORD 97)*. வேர்ட் 2000 *(WORD 2000)* என்ற சொப்ட் பெயர்களைத் தான் தாக்குகின்றது. இதே போன்றே "பபா" *(PAPA)* என்ற வைரசும் ஈமெயிலூடாக வந்து தாக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்டர்நெட் பற்றிப் பேசும் போது பல வெப்சைட்டுக்கள் உள்ளன. இதில் முக்கியமானது யாகூ *(YAHOO)* என்று கூறலாம். இதில் நன்மையும் உண்டு, தீமையும் உண்டு. நன்மை பற்றிக் குறிப்பிடும் போது ஏதாவது ஒரு பாடத்தில் சந்தேகம் வரும்போது இது தீர்த்துக் கொள்ள முடிகின்றது. உலகச் செய்திகள், விஞ்ஞானச் செய்திகள், ஒரு நாட்டின் கலாச்சாரம், பேனா நண்பர்களின் தொடர்பு, ஈமெயில் மூலம் ஒருவரை ஒருவர் பார்த்து உரையாடல் போன்றன நன்மையாக அமையும். ஆனால் இதன் தீமை பற்றிப் பேசும்போது, காமப்படங்கள் பார்த்தல், காமப்புகைப்படங்களைப் பார்த்தல், உலகத்திலிருக்கும் "ரெட்லைட்" ஏரியா, பெண்களின் பெயர் விலாசம், சந்திக்கும் நேரம் என்பவற்றைப் பெறலாம். இந்த விபரங்களை எமது கணனிக்குக் கொண்டு வரும்போது அதனூடாக வைரஸ்கள் நுழைந்து விடுகின்றன. அதாவது வழி தவறிப்போகும் ஒருவரை எயிட்ஸ் வைரஸ் தாக்குவது போன்றது எனலாம்.

## கம்பியூட்டரைத் தாக்கிய புகழ்பெற்ற வைரஸ்கள்

*26*ம் திகதிகளில் பாதிக்கும் வைரஸ் என்பது தாய்லாந்தில் தயாரிக்கப்பட்டது. *CHENDING HAW* என்ற *24* வயது இளைஞர் ஒருவரால் உருவாக்கப்பட்டது. இவர் இந்த வைரஸை *1998* யூன் மாதம் *26*ம் திகதி உருவாக்கினார். *CIH* என்று அழைப்பது இந்த இளைஞரின் முதல் எழுத்துக்களாகும்.

இது போன்றே யூன் *12*ம் திகதி பிலிப்பைன்ஸ் நாட்டுச் சுதந்திர தினத்தை நினைவு கூரும் வகையில் உருவாக்கப்பட்டது. *COM/EXE* என்ற *FILES* களை மாத்திரமே அழிக்கும் வல்லமை கொண்டதாக இந்த வைரஸ் அமைந்திருக்கும். இந்த வைரஸ் அந்நாட்டின் தேசிய கீதத்தையும். தேசிய வர்ணத்தையும் திரையிற் காட்டும் இதன் ஒளியை நிறுத்த வேண்டுமானால் கணனியிலுள்ள கீபோட் *(KEY BOARD)* டின் *CTRT + BREAK* என்ற பொத்தானை அழுத்துவதன் மூலம் அழிக்கலாம்.

"*FRIDAY 13$^{TH}$*" என்ற ஆங்கிலப்படத்தை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். ஒரு பயங்கரமான படம் என்பது யாவரும் அறிந்ததே. அதே போன்ற ஆங்கிலேயர்கள் *13*ம் திகதிகளில் வரும் வெள்ளிக் கிழமைகளில் எந்த நல்ல காரியமும் செய்வதில்லை. பொதுவாக *13*ம் திகதியை அவர்கள் விரும்புவதில்லை. இந்த "*FRIDAY 13$^{TH}$*" என்பதை மையமாகக் கொண்டு ஒரு வைரஸ் உருவாக்கப்பட்டது. இது கடந்த ஆகஸ்ட் மாதம் *(13.08.1999)* அன்று கணனிகளைப் பாதித்தது.

### வைரஸைத் தடுப்பதற்கு தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்.

இதுவரை கணனிகளைப் பாதிக்கும் வைரஸ்கள் கணனிக்குள் இருப்பதைக் கண்டு பிடிக்கக்கூடிய "சொப்ட்வெயர்கள்" கண்டு பிடித்துத் துப்பரவு செய்வதற்குப் பல சொப்ட்வெயர்கள் வந்து விட்டன. இதில் டாக்டர் சொலமன் மிகவும் பிரபல்யமானவர். இவ்வொழிப்பு சொப்டவெயார் **MSAV, CPAV** போன்று வைரங்கள் கணனிக்குள் நுழைந்த பின்னரும் டிஸ்கட் ஒன்றிலிருந்து கணனிக்குள் நுழையும் போதும் கண்டுபிடித்து அழிக்கும் சக்தியைக் கொண்டுள்ளன. ஆனால் கணனிக்குள் நுழைவதற்காக "வைரஸ்கள்" இன்டர்நெட் ஊடாக வரும் போதே கண்டு பிடித்து அழிப்பதுடன் வைரஸ் ஒன்று வருகின்றது என முன்கூட்டியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிக்கும் சக்தியையும் கொண்டது. சொப்ட்வெயார் ஒன்றை இலங்கையிலுள்ள ஏம்.ஏ.ஹசன் என்பவர் கண்டு பிடித்துள்ளார். இன்டர்நெட் வைரஸ் ஐந்து ஆணைகளைக் கணனிக்குள் கொண்டு வருகின்றது. அவையாவன *DATE, TIME, COPY, DOC, MACRO* என்பனவாகும். ஆனால் ஹசன் கண்டுபிடித்துள்ள வைரஸ் டிபெண்டர் *(DEFENDER)* சொப்ட்வெயாரை எமது கணனியில் நுழைத்து வைத்திருப்போமானால் அது தானாகவே தேடிப்பிடிப்பதுடன் எமது கணனிக்குள் வரும் சகலவிதமான வைரஸ்களையும் வரவிடாமல் தடுக்கின்றது. இவரது கண்டு பிடிப்பிற்கு கம்பியூட்டர்கள் வெங்வேஜ் *(COMPUTER LANGUAGE) HYPE TEXT MARKUP* என எழுதியுள்ளார். அதாவது சுருக்கமாக *HIML* என்று கூறலாம்.

இனிவரும் காலங்களில் புதிய வைரஸ்கள் எமது கம்பியூட்டரைத் தாக்கலாம். மேலே கூறிய கண்டுபிடிப்புக்களை மிஞ்சிய நிலையிலும் காணப்படலாம். இதனைத் தடுப்பதற்கு உலகக் கம்பியூட்டர் நிறுவனங்கள் பல ஆய்வுகளை மேற்கொள்வதுடன் ஹசன் போன்ற இளம் கண்டு பிடிப்பாளர்களை ஊக்குவிக்க நடவடிக்கை எடுப்பதுடன் வைரஸ் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்ள ஒரு குழுவினையோ அல்லது நிறுவனத்தையோ உருவாக்க வேண்டும். எனினும் எயிட்ஸ் போன்ற நோய்களை உருவாக்கும் *HIV* வைரஸைக் கட்டுப்படுத்த முடியாத நிலை போன்றுதான் ஏற்படுமோ.

**A. அருட்குமரன்.**

## மனித நேயம்

பத்து நூற்றாண்டுகளுக்கு முன்னர் இங்கிலாந்தில் மன்னராட்சி நிலவியது. மன்னரும், பிரபுக்களும் சர்வ வல்லமை பொருந்தியவர்கள். தமது ஆடம்பர வாழ்வுக்காக மக்கள் மீது வரிச்சுமையை ஏற்றினர். மக்கள் அவலம் குறித்து அக்கறையே இல்லை பிரபுகளுக்கு; சுகபோக வாழ்வு தான் கரிசனை. லியோபிக் நகரில் வரிச்சுமை தாங்க முடியவில்லை. மக்களின் அவலம் கொடிவா என்னும் பெண்ணின் இதயத்தில் மனித நேயத்தின் ஊற்றினை திறந்து விட்டது.

லியோபிக் பிரபுவிடம் வரியைக் குறைக்குமாறு மக்கள் சார்பில் கொடிவா இரங்கினார். மக்கள் தரப்பிலிருந்து எதிர்ப்புணர்வின் முதல் அம்பு இவர் தான் என்பதைத் தெரிந்து கொண்டான். லியோபிக் பிரபு பழிவாங்க எண்ணம் கொண்டான்.

"வரிச்சுமை குறைக்கப்படும் ஆனால் கொடிவா ஆடை எதுவுமற்று நகர வீதிகளில் குதிரை மீது வலம் வரவேண்டும். அது நடந்தால் வரி குறைக்கப்படும்" என்றான் லியோபிக் கொடிவா மக்களின் நலனை முன் நிறுத்தினார். மக்களைப் புரிந்து கொண்டவர் அல்லவா? மக்களும் அவரைப் புரிந்து கொண்டனர். பிரபு எதிர் பார்க்காதது நடந்தது. குறித்த நாள் கொடிவா ஆடையின்றி குதிரையில் வீதிவலம் வந்தாள்.

சாலையில் மக்கள் நடமாட்டம் இல்லை. தெருநாய்கள் கூடக் கிடையாது. சாளரங்களையும், கதவுகளையும் இறுக மூடிவிட்டு வீடுகளில் மக்கள் புனிதம் காத்தனர்.

கொடிவா உயர்ந்து நின்றார். மனித நேயம் வீதி வலம் வந்தது. "கொடிவா கொடிவா சீமாட்டி ஆனார். மக்களின் நலனில் அக்கறை கொண்டோரை மக்கள் புரிந்து கொண்டனர். இங்கிலாந்து மக்கள் இன்றும் கொடிவா சீமாட்டிக்கு விழா எடுக்கின்றனர்.

**– கடல்வன் –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்பிற்கினிய வாசக உள்ளங்களே.........**

வான்முழக்கம் முதலாமாண்டு சிறப்பிதழிற்கு வாழ்த்துச் செய்தி அனுப்பிய அனைத்து வாசக உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு சில வாழ்த்துச் செய்திகளையும் பிரசுரிக்கிறோம். கிடைத்த வாழ்த்துச் செய்திகள் எல்லாவற்றையும் பிரசுரிக்க முடியாமையினையிட்டு மனம் வருந்துகிறோம். உங்கள் ஆசியும் ஆலோசனையும் வான் முழக்கத்திற்கு என்றும் உரம் ஊட்டும். (ஆ-ர்)

## வாழ்த்துச் செய்தி

"வான் முழக்கம்" பல்சுவை இதழ் அதன் ஓராண்டு வெளியீட்டை பூர்த்தி செய்தமையை கண்டு மிக மகிழ்ச்சியடைவதுடன் அதற்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இலக்கியச் சுவையையும் விடுதலை இலக்கையும் இதய ஒலியாகக் கொண்டு சமூகத்தில் பல்துறை மக்களுக்கும் வேண்டிய அம்சங்களைத் தாங்கி வான்முழக்கம் வெளிவருவது பாராட்டுக்குரியது.

தேசம், தேசியம், சர்வதேசம், கவிதை, சிறுகதை, பொது அறிவு எனப் பல அம்சங்களைப் உள்ளடக்கமாகக் கொண்டு வருவதன் மூலம் வாசகர்களுக்கு இந்த விடயங்களில் தெளிவான அறிவை வழங்கும் அதே நேரம் அவற்றின் எழுத்தாளர்களையும் ஊக்குவிக்கிறது. வான் முழக்கம் சமாதான சூழ்நிலைக்கு ஏற்ப வெளிவருவது மிகவும் சிறந்தது.

வானுயர புகழ் பெற்று வான் முழக்கம் தொடர்ந்து வெளிவர பிரார்த்திக்கின்றோம்.

**சி. வி. கந்தையா சிவஞானம்**
யாழ் மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர்.

## தேசத்தின் சொத்தாய் திகழ வாழ்த்துகிறேன்

*அன்பான வான்முழக்கமே*
*புதுப்புது அம்சங்களைத் தந்து*
*அசத்தும் நீ*
*உரம் ஊட்டி தேசத்தின்*
*சொத்தாய் திகழ்வாயாக!!*

**மெய்யழகன் தர்சனன்**
98 2 சட்டநாதர் வீதி.
நாவலர் கல்வி நிலையம்.
நல்லூர்.

*வான்முழக்கம் மலர்ந்தது*
*வாசகர்களைக் கவர்ந்தது*
*வான்முழக்கம் வளமாய் வாழ*
*வாஞ்சையுடன்*
*வாழ்த்துகிறேன்.*

**பா. விஜேந்திரன்**
பாடசாலை வீதி,
மகாறம்பைக்குளம்
வவுனியா.

**வான் முழக்கம் நடத்திய கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்றோர் விபரம் வருமாறு**

முதலாம் இடம்:-
**நவரட்ணம் யசிதரன்**
அன்னை இல்லம்
மயிலியதனை, தொண்டைமானாறு.

இரண்டாம் இடம்:-
**சிவராசா. கரன்**
யா கரவெட்டி
விக்னேஸ்வராக் கல்லூரி,
உயர்தரம், விஞ்ஞானப் பிரிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாமைத்துவம்

# MANAGEMENT

முகாமைத்துவத் தேவை அதிகரிப்பதால் தற்போது அதைக் கற்போர் அதிகம். எந்தத் துறையும் மனிதனுக்கு அவசியமாகும் போது அத்துறை வளர்ச்சியடையும். அதே போல் முகாமைத்துவம் தற்போது வளர்ச்சியடைகின்றது.

முகாமைத்துவம் என்பது ஊழியர்களைக் கொண்டு கருமங்களைச் செய்விப்பது தொடர்பான ஒரு கலையாகும். நிறுவனம் தனது நோக்கத்தை அடைவதற்கான வளங்கள் வரையறுக்கப்பட்டவை. அவை யாவை

வளங்கள்
- பௌதிக வளம்- நடத்தைச் சிக்கலானதல்ல
- மனித வளம்- நடத்தைச் சிக்கலானது

**முகாமைச் செயற்பாடுகள் 4 வகைப்படும்**

1. திட்டமிடல் *(Planning)*
2. ஒழுங்கமைத்தல; *(Organzing)*
3. நெறிப்படுத்தல் *(Directiong)*
4. கட்டுப்படுத்தல் *(Contoling)*

ஒரு குறித்த மனிதக் குழுவின் நோக்கங்களை முடிவு செய்து ,பகுப்பாய்வு செய்து அறிமுகப் படுத்துவதன் மூலம் நோக்கை அடைய முற்படும் நடவடிக்கை யாகும்.

(நிறுவனத்தின் நோக்கை அடையும் பொருட்டு அங்கத்தவரின் முயற்சியையும் நிறுவனத்தின் வளங்களையும் பயன்படுத்தி திட்டமிடல் ,ஒழுங்கமைத்தல் ,கட்டுப்படுத்தல் உள்ளடக்கிய நீண்ட செயன்முறையாகும்)

எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு முகாமை என்பது நிறுவனத்தின் குறிக்கோள் அல்லது இலக்கினை ஊழியர்களாகக் கொண்டு அடைய முற்படும் செயன்முறை யாகும்.

பணிப்பாளர்களையும் வளங்களையும் கொண்டு தகுந்த திட்டங்கள் மூலமாகவும் தகுந்த கட்டுப்பாட்டின் படி நோக்கத்தை வரையறையிட்டு அடையச் செய்யும் முறையே முகாமையாகும்.

**திட்டமிடல்** *(Planning)*

முகாமையாளர் நோக்கினை அடைவதற்கு வேண்டிய செயற்பாடு களை முன்கூட்டியே தீர்மானித்த லாகும்.

**ஒழுங்கமைத்தல்** *( Organzing)*

நிறுவனத்தின் மனித வளங் களையும் மூலவளங்களையும் தொடர்புபடுத்திக் கொள்வதாகும்.

**நெறிப்படுத்தல்** *(Directiong)*

தனக்கு கீழ் உள்ளவர்களை ஊக்குவித்து நெறிப்படுத்தல்.

**கட்டுப்படுத்தல்** *( Contoling)*

திட்டமிட்டபடி கருமங்கள் நடைபெறுகின்றது என்பதையும் நிறுவனம் இலக்கை நோக்கி நகர்கின்றது என்பதையும் உறுதிப்படுத்த மேற்கொள்ளும் நடவடிக்கையாகும்.

நிறுவனம் செயற்படுவதற்காக முகாமை நிறைவுசெய்ய வேண்டிய செயற்பாடுகள்

1. நிறுவனத்தின் நோக்கமும் குறிக்கோளும்
2. வேலையில் நிறைவும் ஊழியரில் சாதனையும் ஏற்படுத்தல்.
3. சமுகங்களையும் சமுக பொறுப்புக்களையும் முகாமை செய்தல்.

**(தொடரும்)**

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உங்கள் இல்லங்களில் மட்டுமல்ல
பொது வைபவ நிகழ்வுகளையும் சிறப்பித்துவரும்
வடமராட்சியின் முன்னணி ஸ்தாபனம்



# ரஞ்சன் போட்டோ அன் வீடியோ

நவீன முறையில் வெளிப்புற மற்றும்
உட்புற படப்பிடிப்பிற்கும் உங்கள் தெரிவாக இருக்க வேண்டியது

# Ranjan Photo & Video

பருத்தித்துறை வீதி, மந்திகை. மந்திகை புலோலி.

உங்கள் இல்லங்களில் நடைபெறும்



பூப்புனித நீராட்டு விழாக்களா
பிறந்ததின விழாக்களா
இருமனமும் சேர்ந்து ஒருமனமாய் இணையும்
திருமண விழாக்களா
எவ்விழாவானாலும் V.D.O படம் பிடித்திடவும்
புகைப்படம் எடுத்திடவும்

# திரு வீடியோ விஷன்

பந்தல்,
மணவறை
பிளாஸ்ரிக் கதிரை
ஆகியனவும் வாடகைக்கு விடப்படும்

070 - 212231
070 - 212738, 0777 - 158754

முத்த விநாயகர் கோவிலடி,
கரணவாய் தெற்கு கரவெட்டி.

மிலேனியம் ஆண்டில்
நவீன வடிவமைப்புக்களில் அழகிய தங்க நகைகளை
22 கரட்டில் குறித்த தவணையில் நம்பிக்கையுடன் செய்து பெற்றிட
யாழ் நகரில் அழகை நாடும் மங்கையர் நாடுவது



# நியூ நகுலா ஜுவல்லரி

# NEW NAGULA JEWELLERY

74, Hasthuriar Road,
Jaffna.

T.P
021 - 2225511
021 - 2223433

74, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ் மாநகரத்தில்
கூட்டுறவுத் துறை சார்ந்த எத்தகைய
பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஓர் முன்னணி ஸ்தாபனம்

## யாழ் மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ-து)

இங்கு கூட்டுறவுத் துறை சார்ந்த அத்தியாவசியப் பொருட்களை
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்
அத்துடன் குடாநாட்டின் அங்கீகாரம் பெற்ற பிரிமா மா
மாவட்ட விநியோகஸ்தர்களாகவும் செயற்படுகிறார்கள்.

மண்ணின் குரலாக முழங்கி வரும் வான்முழக்கம்
முதலாவது ஆண்டை பூர்த்திசெய்வதையிட்டு
யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச்
சங்கங்களின்சமாசமும் வாழ்த்துகின்றது.

111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 021 - 2222662


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org